# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1557/7 - 2008 ජූලි 07 වැනි සඳුදා - 2008.07.07

*1557/7 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78.*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*25அ பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் பயனாக உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் வடறெகெ ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால ஆகிய நான், 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் தொடர்பில் மேற்சொன்ன சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, அதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் பட்டமளிப்புக்கு இட்டுச்செல்லுகின்ற உயர்கல்வியின் அபிவிருத்தி நோக்கத்திற்கென பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றாக மேற்சொன்ன நிறுவகத்தை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*25அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட 2005 யூன் 1ஆந் திகதிய 1395/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

**அட்டவணை**

1. சமூகப் பணிகள் இளமானிப்பட்டம்
2. சமூகப் பணிகள் முதுமானிப்பட்டம்

பேராசிரியர் வடறெகெ ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2008, யூலை 1.*

*07-534*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.